International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 02 April to June 2024 www.irjtsjournal.org

# குரு வழிபாடும் ஆன்ம ஈடேற்றமும் - ஓர் நோக்கு

ந.சுபராஜ், இ.பேபிஷாலினி

*மொழித்துறை*
*கலைகலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்**

குரு,இலிங்க, சங்கம வழிபாடு ஆன்ம ஈடேற்றச் சாதனங்களாக சுட்டப்படுகின்றன. உலகியல் இன்பங்களே நிலையானவை என்று எண்ணி உயிர்கள் உலகப் பற்றுக்களை துறக்காது வாழ்கின்றன. அதற்குக் காரணம் ஒவ்வொரு உயிரையும் பீடித்துள்ள மலங்களினது தாக்கமாகும். இத்தகைய மலங்களின் பிடியிலிருந்து ஆன்மாவினை விடுவித்து இறைவனது திருவடியை அடைவதற்கு துணை செய்வதே ஆன்ம ஈடேற்றச் சாதனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.சைவ சித்தாந்தத்தின் தொகுப்பாக போற்றப்படுகின்ற மெய்கண்ட சாத்திரங்கள் இறைவன், ஆன்மா, உலகம், திருவருள் மற்றும் ஆன்ம ஈடேற்றம் எனப் பல விடயப்பரப்புக்களை தன்னகத்தே கொண்டமைந்ததாக விளங்குகின்றது. அந்தவகையில் இச்சாத்திரங்களில் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய பல்வேறு வழிமுறைகள் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன.அதற்கமைய மெய்கண்ட சாத்திரங்களில் காணப்படுகின்ற குரு வழிபாடு பற்றி கருத்தியல்களை அடையாளம் காண்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கம் ஆகும். அத்துடன் ஆன்மீக ஈடேற்றத்திற்கு சாதனமாக குரு வழிபாடானது அமையுமாற்றினை எடுத்துரைத்தல், துணைநோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக அமைந்துள்ளதோடு சைவ சித்தாந்த சாத்திரங்களில் காணப்படுகின்ற குரு வழிபாடு பற்றிய கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதினால் ஒப்பீட்டாய்வு மூலமும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கத்தினை நிறுவுவதற்காக முதலாம் நிலைத் தரவுகளே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அறிமுகம்**

ஆன்மாவினால் மட்டுமே கடவுளையும், உலகப் பொருளையும் அறிந்துணர்ந்து கொள்ள முடியும். உலகப் பொருளை அறிந்து கொள்வதில் ஆன்மாவுக்கு இடையூறு இல்லை. ஆனால் கடவுளின் மெய்த்தன்மையை அறிந்து கொள்ள இயலாமல் சகச மலத்தினால் மறைப்புண்டு இருக்கின்றது. ஆன்மாவை அதனுடைய பிறப்பிலிருந்தே சகச மலம் தொடர்ந்து வருகின்றது. இறைவனே ஆன்மாவின் சகச மலத்தை நீக்கி அதனை விடுவிக்க முடியும். இவ்வாறு ஆன்மாவை விடுவிக்க இறைவன் குரு வடிவாய் வருகின்றான் என்பதை சைவசித்தாந்தம் வலியுறுத்துகின்றது.

குரு, லிங்கம் சங்கமம் என்னும் மூன்றில் குரு வடிவமாது ஒவ்வொருவர்க்கும் அவர்க்குத் தெரியாத ஒன்றைத் தெரிவிக்கிற ஒருவரது வடிவமாம். எனவே ஞானத்திற்கு மட்டுந்தான் குரு வேண்டப்படுகிறார் என்பதில்லை. உலகியலிலும் அனைத்துத் துறைகட்கும் குரு வேண்டப்படுகின்றார் என்பது தெளிவாகும். இதனால் உலகில் உள்ள யாவரும் தம்மை அறிந்தோ அறியாமலோ குருவை உடையவர்களாகவே இருத்தல் அறியப்படும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

யாவர்ககும் முதல் முதலில் அறிவைத் தருபவர் தாய், தந்தையர் எனவே அவர்களளே நம் முதற்குரு ஆவார்கள். இதனை இருமுது குறவர் என்பர். அதன்பின் எழுத்தறிவிக்கின்ற ஆசிரியர் குருவாகின்றார். அதன்பின், அவரோ வேறு சிலரோ உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியராகின்றனர். பின்னர் வாழ்க்கைக்கு வேண்டும் தொழிலைப்பயிற்றுவிப்பவர் ஆசிரியராகின்றனர்.

அரசியலிலும் சிலர்க்கு சிலர் குருவாய் குருவாய் அமைவதனைப் பார்க்கின்றோம். இப்படி எல்லா வகையிலும், எப்பொழுதும் ஒருவருக்கு ஆசிரியர் வேண்டப்படுவது அனுபவமான நிகழ்ச்சி. “தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் தெரியாது” என்ற பழமொழிப்படி, எந்தத் துறையிலும், யாருக்கும் குரு இல்லாமல் எதுவும் இல்லை என்றே கூற வேண்டும்.

ஒரு மனிதன் ஞானம் அடைவதற்கு ஒரு குருவின் துணை இன்றியமையாதது. அஞ்ஞானம் என்ற ஈரளை அகற்றி ஞானமாகிய ஒளியைத் தருபவரே குரு ஆவார். தனியாக ஒரு மனிதன் சிந்தித்து, பரம்பொருளை உணர்ந்து, ஞானம் அடைவது கடினம். குருவானவர் தான் பெற்ற அனுபவங்களிலிருந்து ஞானம் பெறுவதை எளிமையாக்கி தன் சீடனுக்கு அருள்கிறார். ஆதனால்தான் சீடன் விரைவில் ஞானம் பெறுகின்றான். ஆனால் குருவின் உபதேசம் ஞான வேட்கை உள்ளவர்களுக்கே கிடைக்கும். அவர்களாலேயே அந்த உபதேசத்தை புரிந்து கொள்ளவும் முடியும்.

அதாவது குருவே சிவன், குருவே தெய்வம், குருவே பந்தம், குருவே உயிர், குருவிற்கு நிகராக எதுவுமில்லை. குரு சச்சிதானந்த ரூபமானவர், பரிபூரணமாக திகழ்வபர், எங்கும் இரப்பவர், குருவின் பதாத்தினைப் பணிந்தாலே கடவுளின் பரிபூரண ஆசியைப் பெறலாம். குருவானவர் மனிதனை பாவங்களில் இருந்து மீட்டு நல்வழிப்படுத்தி அவன் மனதில் ஞான ஒளியை ஏற்றுபவர் என்ற எண்ணம் சீடனது உள்ளத்தில் காணப்படின் அவன் விரைவில் ஞானத்தினைப் பெறுவான் என்பது தெளிவு.

**குரு வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்**

**குருவின் அவசியம்**

எண்ணிலடங்கா ஆன்மாக்கள் இந்த உலகினில் வாழ்கின்றன. இத்தகைய அன்மாக்கள் பல வினைகளைச் செய்கின்றன. அவை செய்கின்ற வினைகளுக்கு ஏற்ப அவை மறுபிறவியினை எடுக்கின்றது. அந்தவகையில் பிறவிகளை அடையாது ஆன்மாவானது தன்னைப் படைத்த பரம்பொருளிடம் மீண்டும் சென்று அடையவேண்டும் என்பதே சைவசித்தாந்தத்தின் இலட்சியமாகும்.

நமது வாழ்வின் இலட்சியத்தினை அடையவேண்டும் எனில் நம்மை நாமே அறிந்துகொள்ள வேண்டும். அதாவது இந்த உடலானது இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட நிலையில்லாத பொருள் என்றும் இந்த உலக இன்பங்கள் யாவும் மெய்யானவை அல்ல, அனைத்தும் ஆன்மாவின் அறியாமையே என்பதனை நன்கு அறிய வேண்டும். அவ்வாறு அறியுமிடத்து ஆன்மாவிற்கு ஞானம் கிடைக்கும். ஆனால் ஆன்மாவானது இந்த உண்மைகளையெல்லாம் தானாக அறிகின்ற இயல்பு அற்றது. இவற்றினை ஆன்மாவிற்கு எடுத்துரைத்து அவற்றிற்கு வீடுபேற்றினை அடைவதற்கான வழியினை காட்டுகின்ற ஒருவரே குரு ஆவார். (Subaraj, N., &Rathithevi, S. (2022)).

குருவானவர் கடவுளின் நித்தியத்தன்மையை நமக்கு தெளிவுபடுத்துபவர். ஆத்துடன் கடவுளிடம் நம்மை கொண்டு சேர்க்கும் ஆற்றல் படைத்தவரே குரு ஆவார். குருவின் திருவடிகளைப் பணிவோருக்கு முத்தி கிடப்பது உறுதியாகும். அதாவது குருவின் திருவடியின் மகிமையினை பின்வருமாறு நோக்குவோம்.

“நாலு மறைகாணா அகப்பேய்
நாதனை யார் அறிவார்?
நாலு மறைமுடியும் அகப்பேய்
நற்குரு பாதமடி…!”

என்று அகப்பேய்ச்சித்தர் பாடுகின்றார். இறைவனை அறிய யாரால் முடியும்? அதாவது இறைவன் யாராலும் அறிய முடியாத பரம்பொருளாவான். நான்கு வேதங்களினதும் முடிவாக இருப்பது நற்குருவின் பாதங்களே என்கிறார். இதனூடாக இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலும் கூறப்படுகின்ற தத்துவங்களின் முடிவு கருவின் பாதங்களுக்கு இணையானவை என்று குருவினது திருவடியின் மகிமையினைப் போற்றுகின்றார்.

**குருவின் சிறப்பு**

குரு இறைவனே என்று நூல்கள் கூறுகின்றன. அதற்குக் காரணம்,‘எல்லா உயிர்களுமே ஒருவர் அறிவித்தால் அன்றித் தாமே அறிந்து கொள்ளும் இயல்புடையன அல்ல’ என்பதனை மேலே காட்டிய பழமொழி விளக்கி நிற்கின்றது. ஒருவருக்கு அவர் ஞானத்தைக் கொடுத்தார் என்றால்: அக்குருவுக்க ஞானம் எப்படி கிடைத்தது என்று வினவும் போது அதற்கு அவருடைய குருவால் கிடைத்தது என்ற பதில் தெரியவருகின்றது. அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்று மேலுமம: வினவத்தோன்றும். இவ்வாறே தொடர்ந்து சொல்லிக் கொண்டுபோனால், முடிவில்லாமற் போகும். எனவே உயிர்கள் அறிவித்தால் அறியும் தன்மை உடையன. இறைவன் அவ்வாறன்றித் தானே அறியவும், அறிவிக்கவும் வல்லவன்.

அதனால், அவனே அனைத்துயிர்க்கும் குருவாய் இருந்து அவற்றின் பக்குவ நிலைக்கு ஏற்பப் பலவற்றை அறிவித்து வந்து, முடிவில் ஞானத்தையும் தருகின்றான் என்பதுதான் அவ் ஐயத்திற்கான பதிலாகும். இதனை உணர்ந்து பார்க்கும் பொழுது, குரு என்பது இறைவனே என்ற உண்மை வெளிவருகின்றது. இக்கரத்துப் பற்றியே,“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்…” மற்றும் “எழுத்தறிவித்தவன் இறைவனாகும்….” அத்துடன் தெய்வத்தைப் பொல மதிப்பான் திரிபில்லான் - இவ்வாறு மாண்பும் உடையார்க் குரைப்பவே – செவ்விதின் நூலைத் தெரிந்து போன்ற அறிவுரைகள் எழுந்தன. “அம்மையப்பரே உலகுக் கம்மையப்ப ரென்றறிக” என்றதும், பெரும்பான்மையும் அறிவை நோக்கியதேயன்றி உடம்பை நோக்கியது அன்று. அது பற்றியே,“அறிவினில் அருளால் மன்னிஅம்மையோ டப்பனாகி…” என்ற சிவஞான சித்தித் தொடருக்கு ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்,“உயிர்கட்கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மை யப்பனுமாகி…” என்று உரை எழுதினார்.

யாதோர் உயிர்க்கும் தாய் தந்தையர் இல்லாது உடம்பு தோன்றியது போல, யாதுோர் உயிர்க்கும் சக்தியும் சிவமும் இன்றி அறிவு தோன்றாது என்பது முடிவு. அதனால் அறிவைத் தரும் குரு இறைவனே என்று நூல்கள் கூறுகின்றன.அன்னைத் தந்தையர் முதலாக மேற்கூறிய பலரையும் இறைவனே என்று கூறுவதற்கும் ஞான குருவை,



© 2024, IRJTSR 

இறைவனே என்று கூறுவதற்கும் உள்ள வேறுபாடு மிருதி அதாவது "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி..." "வானாகி மண்ணாகி வளியாகியொளியாகி..." என்பன போன்ற திருவாக்குகளின்படி உடலில் உயிர்போல எல்லாப் பொருளிலும் இறைவன் இரண்டறக் கலந்த அவற்றை இயக்கி வருதல் ஒரு பொது நிலை.

இந்நிலையில் உயிர்கள் இறைவன் தம்முள் இருந்து இயக்குவதனை அஞ்ஞானத்தால் உணர்வதில்லை. அதனால் அவை தம் செயலுக்குத் தம்மையே முதலாகக் கருதிக் கொள்கின்றன. ஆகவே, அவ்வாறு நிகழும் செயல்களெல்லாம் சிவச் செயலாவதன்றி சிவச்செயலாவதில்லை. ஆயினும், ஓர் உயிரால் மற்றோர் உயிர் பயன்பெறும்பொழுது பயனைத் தந்த உயிர் இறைவனை நினையாவிடினும், பயனைப் பெற்ற உயிர் அப் பயனை இறைவன் தந்ததாக கருத வேண்டியதே முறை. ஆக் காரணத்தால் மேற்கூறிய அன்னைத் தந்தை முதலிய அனைவரும் அவர்களால் நலம் பெறுகின்றவர்களுக்குஇறைவனே ஆகின்றனர். பயனை பெறுகின்றவர்கள் பயனைத் தந்தவர்களை இறைவனாகக் கருதினாலும், பயனைத் தந்தவர்கள் (பெரும்பாலானோர்) அவ்வாறு கருதாமையால், அங்கு இறைநிலை நிரம்புவதில்லை.

வேடர் குலத்தில் பல நாள் தங்கி தன்னையறியாத, தனது மகனாகிய அரசகுமாரனை அரசன் தெரிந்தழைத்து இராசபோகம் துய்ப்பிப்பது போல் ஆன்மாக்களை இறைவன் குருவடிவாக வந்து இவ்வுலக பந்த பாசங்களில் இருந்து விடுபடச் செய்கின்றார். இதனை சிவஞான போதம்,

"தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த விட்ட
பன்னிய மின்மையின் அரன் கழல் தொழுமே"

என்கிறது. இதனை சிவஞான சித்தியாரும்,

"மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையோடும் தானாக்கிப் பேணுமாபோல்
துன்னிய ஐம்புல வேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந் தொல்லியரை
மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடிக் கீழ் வைப்பன்"

என அழகுற எடுத்தியம்புகின்றது. இதனை தாயுமானவ சுவாமிகள்,

"...... பருவமதறிந்து நின் அருளான குளிகை கொடு
பரிசித்து வெதி செய்த
பத்துமாற்றுத்தங்கம் ஆக்கியே பணி கொண்ட
பாசத்தை என் சொல்வேன்"

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

**© 2024, IRJTSR** 

எனக் கசிந்துருகிப் பாடுகின்றார்.

அருவமான இறைவன் குரு வடிவம் பெற்று வருவதை திருக்களிற்றுப்படியார் சிறப்பானதோர் உவமை மூலம் விளக்குகின்றது. உவர்ப்புச் சுவை என்பதற்கு உருவம் இல்லை. ஆயினும் கதிரவனின் வெப்பத்தால் கடல் நீர் உப்பாக உருவம் அடைவதைப் போல் உருவம் இல்லாத பதி ஆன்மாவுக்காக குருவடிவம் கொள்கின்றது என்பதை திருக்கடவூர் உய்யவந்த தேவர் இவ்வாறு காட்டுகின்றார்.

''சிவன் எனவே தெறினையான என்றமையால் இன்றும்
சிவன் அவனி வந்த படி செப்பில் - அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச் செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்''

ஞான குரவர் தம்பால் நிகழும் செயல்களைப் பிறர் சிவன் செயலாகக் கருதினும் கருதாவிடினும், தாங்கள் அவை அனைத்தையும் ஞான மிகுதியால் சிவன் செயலாகவே உணர்ந்து தம் செயலற்று நிற்பர். அதனால் அவர்களது செயல்கள் யாவும் சிவன் செயலாதலேயன்றிச் சீவச் செயலாகாது. இதைத்தான் "இறைவன் ஞானியரிடத்தில் தயிரில் நெய்போல விளங்கியும், ஏனையோரிடத்தில் பாலில் நெய்போல விளங்காமலும் இருக்கின்றான்"என்று கூறுகின்றார்கள்.ஆகவே, ஞான குரு சிவனே என்பது முற்றிலும் உண்மையாகின்றது.

இதனையே,

"குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
குருவே சிவமாவது குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே..."

என்று அருளிச் செய்தார் திருமூலர். ஆகவே குரு லிங்க சங்கமம் என்ற மூன்றில் குருவினிடத்தில் செய்யும் வழிபாடு தலையாயதாகின்றது. இவ்வாய்ப்பு ஞான குரு கிடைத்து, அவரால் ஞானம் கைவரப் பெற்றவர்க்கே கைகூடும். அது கிடையாதவர்களும் குருமூர்த்திகளாய் உள்ளவர்களை வழிபடுதல் இன்றியமையாதது.

**குருவின் சிறப்பினை எடுத்துரைக்கும் குருபூர்ணிமா திருநாள் பற்றிய கதை**

தற்காலத்திலும் குருவின் மகிமை பற்றிய கதைகளை நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளியிடுவது போற்றத்தக்க விடயமாக விளங்குகின்றன. அத்தடன் குரு பூர்ணிமாவுடன் தொடர்புடைய பழங்கதை ஒன்று உள்ளதுஇ அதனை நோக்கமிடத்து,கோதாவரி நதிக்கரையில் ஜனார்த்தனர் என்றொரு சுவாமிகள் இருந்தார். அவருக்கு ஏகநாதர் என்றொரு சீடர் இருந்தார். அவர் தன் குருவை கடவுளுக்கும் மெலாக மெண்ணுபவர்.

குருவின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாதவர். குருவின் நித்திய பூஜைக்காக அவர் கூறியபடி தினமும் பக்தி சிரத்தையோடு கோதாவரி நதியிலிருந்து பெரய குடத்தில் நீர் எடுத்து வந்து கொடுப்பதை வழக்கமாகக்

கொண்டிருந்தார் ஏகநாதர். ஆவன் தன்னிடம் கொண்டிருக்கும் பக்தி சிரத்தையை உணர்ந்த குரு, தன் வழிபாட்டு தெய்வமான தத்தாத்ரேயரை மானசீகமாகத் துதித்து ஏகநாதர் கோதாவாரியில் நீர் முகந்து வரும் வழியில் அவருக்கு தரிசனம் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

அடுத்த நாள் ஏகநாதர் கோதாவாரியிலிருந்து நீர் எடுத்துக் கொண்டு வரும்போது தத்தாத்ரேயர் தன் சுயரூபத்துடன் ஏகநாதருக்கு தரிசனம் தர, ஏகநாதரோ, தன் குருவின் அனுஷ்டானத்திற்காக நீர் எடுத்துச் செல்வதாகவும், வழியை விட்டு விலகியிருக்கவும் தத்தாத்ரேயரிடம் கூறினார். உடனே தத்தாத்ரேயர் தான் யாரென்று தெரிகின்றதா?" என்று கேட்க, அதற்கு சீடன் அவர் யாராய் இருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. தனக்கு குருவிற்கு செய்யும் பணியே பிரதானம். அதனால் வழி மறிக்க வேண்டாம் என்று கூறினார். ஏகநாதரின் குருபக்தியை மெச்சி, அவர் கேட்காமலேயே அவருக்கு பரிபூரண ஞானம் சித்திக்க அருள்புரிந்தார் தத்தாத்ரேயர்.

வீடு திரும்பிய சீடரிடம் "கடவுளின் தரிசனம் கிடைத்ததா?" என்று கேட்க,"நான் தான் தினமும் கடவுளைத் தரிசிக்கின்றேனே! என்றார். உடனே ஜனார்த்தன சுவாமிகள்,"இன்று தத்தாத்ரேயர் உனக்கு தரிசனம் தரவில்லையா?" என்றார். அதற்கு,"எனக்கு கடவுளே தாங்கள் தான். என்றாவது ஆண்டவனை பார்க்கவேண்டுமென்று தங்களிடம் கேட்டிருக்கின்றேனா?" என்கிறார் ஏகநாதர்.

பல்லாண்டுகள் தவமிருந்தாலும் கிடைக்காத தத்தாத்ரேயர் தரிசனம் குருவின் அருளினால் சீடனுக்கு எளிதில் கிடைத்ததற்கு காரணம் அவனுடைய குரு பக்தி, தனது சீடனின் நல் வாழ்விற்கு வழிகாட்டிய குருவுக்கு நன்றிக்கடன் செலுத்தக்கூடிய திருநாளே குருபூர்ணிமா.ஆடி மாதப் பௌர்ணமியை"ஆஷாட சுத்த பௌர்ணமி" என்பர். இந்நாளில் துறவிகள் சாதுர்மாஸ்ய விரதத்தைத் துவக்குவார்கள்.

ஆதி குருவாகக் கருதப்படும் தட்சணாமூர்த்தி, தன் சீடர்களுக்கு தட்சிணாயத்தின் முதல் பௌர்ணமியான ஆடி பௌர்ணமியன்று கல்லால மரத்தின் கீழ் தெற்கு நோக்கிஅமர்ந்து,அவர்களுக்கு ஞானத்தை உபதேசித்தார் என்று கூறப்படுகின்றது.அன்றைய தினம் குரு பௌர்ணமி என்று அழைக்கப்படுகின்றது. இந்நாளை துறவிகள் இந்து மதத்தின் கருப்பொருளாக விளங்கும் வேதத்தினை நமக்களித்த வியாசரைக் கொண்டாடும் விதமாக வியாச பூசை செய்து கொண்டாடுவர். ஆதனால் இந்நாளை வியாச பூர்ணிமா என்று அழைப்பர்.

வேத வேதாந்தக் கல்வி பயின்றவர்கள் தங்களது கரமார்களை நினைவு கூறும் வகையில் அன்றைய தினத்தில் சிறப்பாக குருபூஜை செய்வது மரபு. இந்நாளில் எல்லா மடங்களிலும் ஆச்சிரமங்களிலும் விழாக் கொண்டாடுவர்.சீடர்களும் ஆன்மீக அன்பர்களும் தங்கள் குருவை நாடிச் சென்று வணங்கி குருவருள் பெறுவர். புதிய சீடர்கள் குரு தீட்சையைப் பெறுவார்கள்.

குருவை உள்ளனபோடு பணிந்தால் பிரம்மா சிவன் விஸ்ணு பேதமில்லாமல் எல்லோரையும் பூசித்ததாகின்றது. இத்தகைய திருநாள் இன்றும் அனைத்த மக்களாலும் பகடைபிடிக்கப்பட்டு வருவது வழக்கமானதாக இருப்பதும் குருவின் மகிமையை உலகிகு எடுத்துரைக்கின்றது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

**குருசீடர் உறவின் பெருமையினை வெளிப்படுத்தும் கதை**

குரு மற்றும் ஆச்சாரியர் என்பதற்கு இடையே நுட்பமான வேறுபாடு உள்ளது. ஜகத் குரு, சற்குரு, ஞான குரு என்ற நிலைகள் உள்ளன. ஆச்சாரியர் என்பவர் சீடர்களுக்கு எதை வழி நடத்தி செல்கின்றாரோ, அதை கடைபிடிப்பவராக இருக்க வேண்டும். வைணவத்தில் குரு சீட உறவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குருகூரில் நம்மாழ்வார் பிறந்ததும் அது ஆழ்வார் திருநகரி என்ற முக்கியத்துவம் பெற்றது. பெருமாள் கோயில் இருந்தும், ஆழ்வார் முக்கியத்துவம் பெற்றுவிட்டார்.

ராமானுஜர் காவிரி ஆற்றை கடந்து சென்ற போது, பாதரட்சையைக் கழற்றி சீடரிடம் கொடுத்தார். மறுகரை வந்ததும் திரும்பி பார்த்த ராமானுஜர் அதிர்ச்சியடைந்தார். அவருடைய பாதரட்சையை சீடர் தான் சுமந்து வந்த பெருமாள் விக்ரக பெட்டியின் மீது வைத்திருந்தார். சீடரிடம் கேட்டபோது, உங்களுக்கு தான் பெருமாள் ஒசக்தி, எனக்கு நீங்கள் தான் ஒசக்தி என்றார். ஆச்சாரியர்களை பகவானைக் காட்டிலும் உயர்வாக சீடர்கள் வைத்திருந்தனர்.

ராமானுஜரை விடம் வைத்து கொள்ள பார்க்கின்றனர் என்ற தகவல் கிடைத்ததும், அவருடைய குரு திருகோடியூர் நம்பி அவரை தேடி வந்தார். குரு தன்னை பார்க்க வருவதை தெரிந்ததும் ராமானுஜர் அவரை வரவேற்கச் சென்றார். காவிரி ஆற்றங்கரையில் குருவை கண்டதும் சிறிது தூரத்தில் வரும்போதே ஆற்றங்கரை மணலில் சாடாங்கமாக விழுந்து வணங்கினார். சுட்டெரிக்கும் மணலில் ராமானுஜர் விழுந்து கிடந்தார். குரு எழுந்திரு என்று சொல்லும் வரை சீடர் எழக்கூடாது என்பது வைணவ மரபு.

திருகோடியூர் நம்பி ஏதும் பேசாமல் நின்றிருந்தார்.அங்கு வந்த ராமானுஜரின் சீடர், சுட்டெரிக்கும் வெயிலில் ஆற்று மணலில் படுத்திருந்த ராமானுஜரை தன் கைகளில் தூக்கியவாறு, திருகோடியூர் நம்பியிடம், பூமாலையை இப்படி நெருப்பில் இடலாமா எனக் கேட்டார்.குரு மீது அக்கறையுள்ள உம்மைப் போன்ற சீடரை தேடித்தான் காத்திருந்தேன். ராமானுஜரை உம்மிடம் ஒப்படைக்கின்றேன் என திருகோடியூர் நம்பி பதிலாக கூறினார்.

குருகுலத்தில் கிருஸ்ணரும், குலேசரும் படித்த காலத்தில் சுள்ளி சேகரிக்கச் சென்றபோது, மழையின் காரணமாக காலதாமதம் ஏற்பட்டதால் சீடர்களை தேடி சென்று அவர்களை குரு அழைத்து வந்தார். குரு சிʼய உறவு என்பது பெருமை மிக்கது. குருவைத் தேடிச் சென்று நமது பிரச்சினைகளுக்கு நேரடியாக தீர்வு கண்டு வர வேண்டும் என்பது அவசியமில்லை. அவருடைய அனுகிரகம் கிடைத்தாலே நமது துன்பங்கள் தீர்ந்து விடும். குரு பார்வை விசேடமானது.

கோடிக்கணக்கான ஜீவராசிகள் இந்த உலகத்தில் வாழ்கின்றன. அவற்றுள் மனித இனமும் ஒன்று. மனிதன் பாவமும் செய்கிறான். புண்ணியமும் செய்கிறான். பாவ புண்ணியத்துக்கு தக்கபடி அடுத்தடுத்துப் பிறவி அனுபவங்கள் வந்து வாய்க்கின்றன. ஆறறிவு பெற்ற மனிதன் மனித நிலையைக் கடந்து மேலும் முன்னேறி, பரம் பொருளோடு ஐக்கியமாகிவிட வேண்டும்.

**முடிவுரை**

ஆன்மாவானது ஈடேற்றம் அடைவதற்குரிய வழிமுறைகளை தொகுத்து கூறுகின்ற நூல்களுள் மிகவும் முதன்மையானவைகளாக இந்த மெய்கண்ட சாத்திரங்கள் விளங்குகின்றன. அதாவது ஆன்ம ஈடேற்றம் பற்றி பல நூல்களில் பேசப்பட்டிருந்தாலும் அதற்கான வழிமுறைகள் பற்றி கூறப்பட்டிருந்தாலும் இச் சாத்திர நூல்களைப்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

போல் தெளிவுபட விரிந்துரைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஏனெனில் இந்த பதினான்கு நூல்களிலும் பேசப்படுகின்ற அனைத்து விடயங்களின் உட்பொருளாக ஆன்ம ஈடேற்றம் காணப்படுகின்றது.

அதாவது ஒவ்வொரு ஆன்மாவும் தனது கன்ம வினைகளுக்கு ஏற்ப பிறப்பு மற்றும் இறப்பு முதலிய நிலைகளினைப் பெறுகின்றன. இப்பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டுள்ள அனைத்து ஆன்மாக்களும் நிச்சயம் அவற்றினுடைய கன்ம பலன்களை அடைந்தே தீரும். இந்த உலகில் ஆன்மாக்கள் படைக்கப்படுவதன் நோக்கம் அவற்றினுடைய கன்ம பலன்களை அனுபவித்து இறுதியில் ஈடேற்றத்தினை அடைய வேண்டும் என்பதாகும். இதுவே சைவ சமயத்தவரின் உயர் இலட்சியமாக அமைகின்றது.

ஆன்மஈடேற்றம் அடைவதற்கு பல வகையான வழிமுறைகள் காணப்படினும் அவற்றுள் குரு வழிபாட்டையே அதிகம் எடுத்துரைக்கின்றமை இச்சாத்திர நூல்களின் சிறப்பாக விளங்குகின்றன. ஆன்மாக்கள் தம் வாழ்வின் பிறவிப்பயனை அடைவதற்கு குரு வழிபாட்டினை கடைப்பிடிக்க வேண்டுமென்பது இன்றியமையாதது. வழிபாடானது அக வழிபாடு, புற வழிபாடு என இரு பகுப்புக்களை கொண்டமைந்துள்ளது. கடவுள் வழிபாடே நமது வாழ்வினையும் நாம கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தையும் சீர்படுத்தக்கூடியது. தீய ஆசைகள் அல்லது தீய சிந்தனைகள் எழும்போது சிவ சிந்தனை செய்தால் அத்தகைய எண்ணங்கள் எம்மனதை விட்டு அழிந்துவிடும். இறைவனே உயிர்களுக்கு ஞானத்தைபோதிப்பதற்காக குரு வடிவெடுத்து வந்துள்ளார். உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதருக்கும் குரு என்ற ஒருவருண்டு. குருவை மதித்து போற்றி வழிபடவேண்டுமென்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஆரம்ப காலங்களில் குரு வழிபாடு சிறப்புற்று காணப்பட்ட போதிலும் அதன் மகத்துவத்தினை பலர் அறியவில்லை. ஆன்மாவானது ஞானம் பெற வேண்டுமெனில் குரு வழிபாடு அவசியமாகும். தற்காலத்திலும் குரு வழிபாடு சிறப்புடன் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வின் முடிவுகளாக உடல், பொறி, கரணங்களும் உலகமும் உயிர்களின் நன்மை கருதி இறைவனால் படைக்கப்பட்டவையாகும். மும்மலங்களுக்குட்பட்ட உயிரானது அம்மலங்களின் சார்பில் பல பிறப்புக்களை எய்தி பல நுகர்ச்சிப்பொருட்களை அடைந்து பல இன்ப துன்பங்களை நுகர்கின்றது. அஞ்ஞானத்தினால் உயிர்கள் தமது அறிவு விளையும் செயல்கள் முற்றிலும் செயற்படாமல் கட்டுண்டு நிற்பதே பந்தம் எனப்படும். ஞானம் வரும் வரையில் அஞ்ஞானம் நீங்காது. அதாவது, ஞானம் ஏற்படாத வரையில் எமக்கு முத்தி கிடைக்காது என்பது தெளிவானது. முப்பொருள்களின் இயல்பினை உள்ளவாறு உணர்வதற்கு தடையாக இருந்த வினையானது ஞான ஆசிரியனது நிர்வாண தீட்சையினால் அடியோடு அழிந்து விடும். ஆன்மாவினது வாழ்வு எனும் இப்பயணமானது இறைவனை அடையும் போது நிறைவு பெறுகின்றது. வாழ்க்கையில் மேலான நோக்கம் வீடுபேறு அடைவதாகும். அலையும் நமது மனமானது அங்குமிங்கும் உழன்று உலகின் சுகதுக்கங்களையெல்லாம் துய்த்து மயக்கம் நீங்கி கன்ம வினைகளை அனுபவித்து இறுதியில் ஈடேற்றத்திற்கான வழியினை கடைபித்து முத்தியினைப் பெறுகின்றது. இத்தகைய முத்தியினை அடைவதற்கு குரு வழிபாடானது இன்றியமையாதது.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்ற ஆன்மீக சாதனங்களின் குரு வழிபாடானது மனித விழுமியத்துடனும் ஆன்ம நேயத்துடனும் தொடர்புள்ள சாதனங்களாக அமைகின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மனித உள்ளத்தில் உலக இன்பங்கள் மாத்திரமே நிலையானது எனும் சிந்தனையை மாற்றியமைத்து அவனை இறைவன்பால் இட்டுச்செல்வதற்கு ஒரு பாதையாகவே இந்த குரு வழிபாடானது அமைகின்றது.

உசாத்துணை நூல்கள்

[1] கந்தசாமி.சோ.ந. **இந்திய தத்துவ களஞ்சியம்,** தென்னகத் தத்துவங்கள்,*தொகுதி-3*,மெய்யப்பன் பதிப்பகம், சென்னை-2003.

[2] மகாதேவன்.T.M.P.**இந்து சமய தத்துவங்கள்**, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1964.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

[3] Dasgupta.S. **A History of Indian Philosophy**, *Volume-IV*, Motilal Banarsidass Publication, Delhi, 1991.

[4] Subaraj, N., & Rathithevi, S. (2022). Educational thoughts of swami Vipulananda.

[5] Radhakrishnan.S. **Indian Philosophy**, *Volume –2*, Centenary Edition, OxfordUniversity Press, 1991.

[6] Sharma.C. **A Critical Survey of Indian Philosophy**, Motilal Banarsidass Publication, Varanasi, 1994.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*